# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மானியக் கோரிக்கை எண்.37

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

## கொள்கை விளக்கக் குறிப்பு
2022 - 2023

**V செந்தில்பாலாஜி**

மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம் | 2–16 |
| 3. | மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு | 16–25 |
| 4. | போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (குற்றப் புலனாய்வு பிரிவு) | 26–31 |
| 5. | தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் | 31–41 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# மானியக் கோரிக்கை எண்.37

# மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

## 1. முன்னுரை

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அலகின் கீழ் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு ஆகிய மூன்று துறைத் தலைமை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், ஒரு பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் இவ்வலகின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை பிரிவானது, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றது.

## 2. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்

2.1 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்கள் 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X / 1937) மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள விதிகளை செயல்படுத்தும் பொறுப்புடைய அலுவலர் ஆவார். மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகள் பின்வரும் பரந்த குறிக்கோள்களின் அடிப்படையில் செயல்படுகின்றன:–

- 1937– ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் X/1937) மற்றும் இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள பல்வேறு விதிகளை நடைமுறைப்படுத்துதல்.

- சிறந்த ஆயத்தீர்வை நிர்வாகத்தின் மூலம் அரசுக்கு அதிகபட்ச வருவாய் கிடைப்பதை உறுதி செய்தல்.

- பொதுமக்களிடையே மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து மதுவிலக்கு அமலாக்கப்பிரிவின் துணை கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளச்சாராயம் விற்பனை செய்வதை தடுத்தல் மற்றும் மாநில எல்லை வழியாக போலி மதுபானம் வருவதை தடுக்க சோதனைகள் நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2.2 மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் 2 இணை ஆணையர்களும், அரசின் இணைச் செயலாளர் (நிதித்துறை) நிலையில் 1 நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரும் மற்றும் துணை ஆட்சியர் நிலையில் 5 உதவி ஆணையர்களும் மதுவிலக்கு கொள்கையை நடைமுறைப்படுத்த மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கு உதவி வருகின்றனர். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியருக்கு உதவியாக துணை / உதவி ஆணையர்கள் (கலால்) பணிபுரிந்து வருகின்றனர்.

2.3 துணை ஆட்சியர் நிலையில் அலுவலர்கள் 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் சாராவி / இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் / பீர் / ஒயின் உற்பத்தியினைக் கட்டுப்படுத்தவும், அவற்றைத் தவறான நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும், ஆயத்தீர்வை விதிக்கப்படவேண்டிய பொருட்களுக்கு ஆயத்தீர்வை விதிப்பதை கண்காணிக்கவும் இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்காணும் பணிகளை இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் பிணைமுறி கிடங்குகள் ஆகியவற்றில் மேற்கொள்ளும்

பொருட்டு வருவாய்த் துறையைச் சார்ந்த வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலுள்ள அலுவலர்கள் முறையே ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களாகவும், பிணைமுறி அலுவலர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses)**

2.4 சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை தயாரிப்பின்போது, துணைப் பொருளாக உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு (Molasses) சாராவி (Spirit) உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளாகும். கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், பயன்படுத்துதல், விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல் மற்றும் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்வதற்கான உரிமங்களை வழங்குவதற்கு, மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் அதிகாரம் படைத்த அலுவலர்கள் ஆவர். கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான உரிமம் வழங்கவும், கருப்பஞ்சாற்றுக் கசண்டு இறக்குமதி / ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கவும் மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோர்களுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் முன் அனுமதி வழங்கப்படும். உரிமதாரர்கள் மதுவிலக்கு

மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் நிர்ணயிக்கப்படும் உரிம அளவிற்கு ஏற்ப கருப்பஞ்சாற்றுக் கசண்டினை இருப்பு வைத்து பயன்படுத்த இயலும்.

**வடிப்பாலைகள் மற்றும் சாராவி தயாரித்தல் (Distilleries and Spirit Production)**

2.5 தமிழ்நாட்டில் 17 வடிப்பாலைகள் உள்ளன. இவற்றில் 15 வடிப்பாலைகள் தனியார் துறையிலும், 2 வடிப்பாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. இவ்வடிப்பாலைகள் மது உற்பத்தி செய்வதற்கு பயன்படும் மூலப்பொருளான சாராவியினை உற்பத்தி செய்கின்றன.

**தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி (GENA)**

2.6 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்களில் உயர்தர மதுபான வகைகளைத் தயாரிப்பதற்கு தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி உற்பத்தி செய்யப்படுவதில்லை என்பதால் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. 2021–2022–ஆம் ஆண்டில்,

8.26 கோடி லிட்டர் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சாராவி வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

**எத்தனால் (Ethanol)**

2.7 எத்தனாலை பெட்ரோலுடன் எளிதாகக் கலக்க இயலும். ஏனெனில் இது ஓர் உயிரி எரிபொருள் மற்றும் மாசற்ற தன்மையுடையது. ஒன்றிய அரசின் தேசிய உயிரி எரிபொருள் செயல்முறை திட்டத்தின் கீழ், எத்தனால் பெட்ரோலுடன் கலக்கும் திட்டம் மாநிலத்தில் ஊக்குவிக்கப்படுகிறது. தற்போது தமிழ்நாட்டில் 17 வடிப்பாலைகளில் எத்தனால் உற்பத்தி செய்யும் வசதியுள்ளது.

**இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் உற்பத்தி நிறுவனங்கள்**

2.8 தற்போது தமிழ்நாட்டில் 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் தயாரிக்கும் நிறுவனம் இயங்கி வருகின்றன.

## பீர் ஏற்றுமதி

2.9 தமிழ்நாட்டில் இருந்து வெளி மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு பீர் ஏற்றுமதி செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. வெளி மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி அனுமதி இணைய வழியில் வழங்கப்பட்டு வருகிறது.

## அயல்நாட்டு மதுபானங்கள் இறக்குமதி

2.10 1981–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளின் கீழ் உரிய சிறப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்ட பின்னர், பிற நாடுகளிலிருந்து அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்வதற்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரால் அனுமதி ஆணைகள் வழங்கப்படுகின்றன. 02.03.2012 முதல் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், எப்.எல்.2 உரிமதாரர்கள் (மனமகிழ் மன்றங்கள்) மற்றும் எப்.எல்.3 உரிமதாரர்களுக்கு (மூன்று நட்சத்திர மற்றும் அவற்றிற்கு குறைவான நட்சத்திரத் தகுதி பெற்ற உணவு விடுதிகள் மற்றும் நட்சத்திரத் தகுதி பெறாத உணவு விடுதிகள்) அயல்நாட்டு மதுபான வகைகளை இறக்குமதி செய்து வழங்குகிறது. மதுபான இறக்குமதிக்கான சிறப்புக் கட்டணத்

தொகையில் 3 விழுக்காடு சேவைக் கட்டணமாக டாஸ்மாக் நிறுவனத்தால் வசூலிக்கப்படுகிறது.

2.11 எப்.எல்.3 உரிமதாரர்கள் (நான்கு நட்சத்திர மற்றும் அவற்றிற்கு அதிகமான நட்சத்திரத் தகுதி பெற்ற உணவு விடுதிகள்) பிற மாநிலங்களில் அமைந்துள்ள அயல்நாட்டு மதுபானங்களை விநியோகிப்பவர்களின் ஆயத்தீர்வை பிணைமுறி கிடங்குகளில் (Excise Bonded Warehouses) இருந்து இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானங்களைத் தொடர்ந்து நேரடியாக கொள்முதல் செய்யலாம்.

2.12 2021–2022–ஆம் ஆண்டில் அயல்நாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்ததன் மூலம் சிறப்புக் கட்டணமாக அரசுக்கு ரூ.33.83 கோடியும், சேவைக்கட்டணமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு ரூ.3.58 இலட்சமும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**நீரா**

2.13 தென்னை மரத்தின் பூம்பாளையிலிருந்து வரும் சாற்றிலிருந்து நொதிப்பு எதிர்ப்பு தொழில் நுட்பத்தினை (Anti Fermention Technology) பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஆல்கஹால் இல்லாத ஊட்டச்சத்து பானமே நீரா ஆகும். தென்னை மரங்களிலிருந்து நீரா

சேகரிப்பதற்கும், நீராவிலிருந்து இதர பொருட்கள் தயாரிப்பதற்கும் உரிமங்கள் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

2.14 2013–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் (Companies Act, 2013) பதிவு செய்யப்பட்ட தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்கள் அல்லது 1983–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் நீராவை சேகரிக்கவும், விநியோகிக்கவும், விற்பனை செய்யவும் மற்றும் நீராவிலிருந்து பொருட்கள் தயாரிப்பதற்குமான உரிமங்கள் பெற தகுதி பெற்றவை ஆகும். உரிமம் கோரி விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் தென்னை வளர்ச்சி வாரியத்திலும் பதிவு செய்திருக்க வேண்டும்.

**பதநீர்**

2.15 பனை மரம், ஈச்ச மரம் மற்றும் அவை போன்ற மரங்களின் பூம்பாளையிலிருந்து, நொதிக்க விடாமல் சேகரிக்கப்படும் பிரபலமான ஊட்டச்சத்து பானமே பதநீர் ஆகும். பதநீரை சேகரிக்கவும், இருப்பு வைத்துக் கொள்ளவும், கொண்டு செல்லவும், விற்பனை செய்யவும், விநியோகம் செய்யவும் மற்றும்

பதநீரிலிருந்து பொருட்களைத் தயாரிப்பதற்கும் உரிமம் வழங்கப்படுகிறது.

**மாநில ஆய வில்லைகள்**

2.16 காகித ஆயவில்லைகளுக்கு பதிலாக நகலெடுக்க முடியாத, செயற்கை இழை ஒளிரும் ஆயவில்லைகளை ஒட்டும் நடைமுறை அரசால் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், போலி மதுபான விற்பனையை ஒழிக்கவும், பிற மாநிலங்களிலிருந்து மதுபானக் கடத்தலை கட்டுப்படுத்தவும், மதுபானத் தயாரிப்பு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள்/ பீர் மற்றும் ஒயின் பாட்டில்களுக்கு செலுத்தப்படும் ஆயத்தீர்வையினை உறுதி செய்யவும் சாத்தியமாகிறது. இவ்வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களும் அவ்வப்போது தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தற்போது, மாதமொன்றுக்கு சராசரியாக தேவைப்படும் ஆயவில்லைகள் 27 கோடி ஆகும். 2021–2022–ஆம் ஆண்டில் ஆயவில்லைகளின் விற்பனை மூலம் அரசு ஈட்டியுள்ள நிகர வருவாய் ரூ.18.58 கோடியாகும்.

**உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம்**

2.17 ஒன்றிய அரசின் உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம், வடிப்பகம் மற்றும் வடிப்பகம் அல்லாத மதுபானங்களுக்கென தர நிர்ணயம் செய்யும் வகையில், 2018–ஆம் ஆண்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் (மதுபானங்களின் தரங்கள்) ஒழுங்குமுறைகளுக்கான அறிவிக்கையினை 01.04.2019 முதல் வெளியிட்டுள்ளது.

**மின் ஆளுமை நடவடிக்கைகள்**

2.18 உரிமங்களை புதுப்பித்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான அனுமதி ஆணைகள் வழங்குவதற்குரிய கால அவகாசத்தினை வெகுவாகக் குறைக்கும் வகையில் இணையதள செயலிகள் மூலமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

அ) அயல்நாட்டு மதுபானங்களை எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3 ஏஏ உரிமதாரர்கள் இறக்குமதி செய்ய அனுமதி ஆணை வழங்குதல்.

ஆ) பீரினை வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி ஆணை வழங்குதல்,

இ) எப்.எல்.2, எப்.எல்.3, எப்.எல்.3ஏ மற்றும் எப்.எல்.3 ஏஏ உரிமங்களைப் புதுப்பித்தல்.

2.19 மின் ஆளுமை நடவடிக்கைகளின் கீழ் 74 சேவைகளை இணையவழி மூலம் வழங்கும் வகையில் மின் ஆளுமை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அவற்றை கணினிமயமாக்குவதற்கும் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தேசிய தகவலியல் மையம் (NIC) மூலம் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மனந்திருந்திய மதுவிலக்கு குற்றவாளிகளுக்கான மறுவாழ்வு நிதி**

2.20 முன்னாள் மதுவிலக்கு குற்றவாளிகளின் சமூக மற்றும் பொருளாதார மறுவாழ்விற்காக அரசு ரூ.5.00 கோடி மானியமாக வழங்கி வருகிறது.

2.21 இந்த திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளைத் தெரிவு செய்து, அவர்களின் பொருளாதார மறுவாழ்விற்காக மானியம் வழங்கும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், முதுநிலை மண்டல மேலாளர் (தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்), துணை ஆணையர் (கலால்)/உதவி ஆணையர் (கலால்)

ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு மறுவாழ்வு குழு அமைக்கப்பட்டுள்ளது.

2.22 அடையாளம் கண்டறியப்பட்ட ஒவ்வொரு பயனாளிக்கும் மானியமாக அதிகபட்சமாக ரூ.30,000/- வரை நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்நிதியுதவியின் மூலம் பயனாளிகள் நிரந்தர வருவாய் ஈட்டும் பொருட்டு, ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் வளர்த்தல், ஊதுவத்தி, கற்பூரம், உடனடி சாம்பிராணி, மெழுகுவர்த்தி, காகிதக்குவளை, சலவை சோப்பு, சலவைத் தூள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் சிறு வியாபாரங்களை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்படுகிறது.

2.23 2021-2022-ஆம் ஆண்டில், 872 மதுவிலக்கு குற்றவாளிகளின் மறுவாழ்விற்காக ரூ.2.61 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

**மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு**

2.24 மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளும் வகையில் அரசால் ரூ.4.00 கோடி நிதி 2021-2022-ஆம்

ஆண்டிற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், காவல்துறையின் அமலாக்கப் பிரிவிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

2.25 ஒவ்வொரு மாவட்டத்திலும், மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மண்டல காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர், முதன்மைக் கல்வி அலுவலர், மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் மற்றும் துணை ஆணையர் (கலால்) / உதவி ஆணையரை (கலால்) உறுப்பினர் – அமைப்பாளராகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது.

2.26 அனைத்து மாவட்டங்களிலும் மாதந்தோறும், தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் விழிப்புணர்வுப் பேரணி, முகாம்கள், கருத்தரங்குகள், தெரு நாடகங்கள், சிறு நகைச்சுவை நாடகங்கள், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பொது இடங்களில் விளம்பரம் மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், மனித சங்கிலிப் பேரணி போன்றவை மூலம் சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் துணை கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் மது அருந்துவதால் பாதிக்கப்படக்கூடிய மக்களை உள்ளடக்கிய வாழ்விடங்களை இலக்காகக் கொண்டு,

மாவட்ட நிர்வாகத்தால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பள்ளிகள் / கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, குழு கலந்துரையாடல், சுவரொட்டி தயாரித்தல் மற்றும் கட்டுரைப் போட்டிகள் ஆகியவை பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர, பொது மக்களுக்கு டி–சர்ட், பயணப்பை மற்றும் நாட்காட்டிகள் விநியோகிக்கப்படுகின்றன. கிராமப்புறங்களில் தெரு நாடகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், மாவட்ட வாரியாக பெரிய அளவிலான விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டு, பேரணியின் போது, மது அருந்துவதற்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், அதன் ஒரு பகுதியாக அனைத்து மாவட்டங்களிலும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. போக்குவரத்துக் கழகங்களுக்கு மதுவிலக்கு விழிப்புணர்வு குறித்த ஒட்டும் வில்லைகள் அளிக்கப்பட்டு, பேருந்துகளில் ஒட்டப்படுகின்றன. மதுவிலக்கு விழிப்புணர்வு தொடர்பாக கவிதை எழுதுதல், சிறுகதை எழுதுதல் மற்றும் குறும்படம் தயாரித்தல் போன்ற பிரிவுகளில் மாநிலம் தழுவிய போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

**போதை மீட்பு மையங்கள்**

2.27 தமிழ்நாட்டில் 19 போதை மீட்பு மையங்கள் மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு ஒருங்கிணைந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகள் வழங்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன.

**3. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு**

3.1 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்வதை ஒழிப்பதற்காகவும், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள் அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படுவதை தடுப்பதற்காகவும் செயல்பட்டு வருகிறது.

3.2 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் தலைவராக காவல் துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) உள்ளார். அவருக்கு உதவியாக சென்னையில் ஒரு காவல் கண்காணிப்பாளர், மத்திய புலனாய்வுப் பிரிவு (தற்பொழுது "மத்திய நுண்ணறிவு பிரிவு"), சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களில் தலா ஒரு காவல் கண்காணிப்பாளர் (அமலாக்கம்) வீதம் பணியாற்றி வருகின்றனர்.

சென்னையில் உள்ள மத்திய நுண்ணறிவு பிரிவில் காவல் கண்காணிப்பாளருக்கு உதவியாக 2 காவல் துணை கண்காணிப்பாளர்களும், 6 காவல் ஆய்வாளர்களும், 8 காவல் உதவி ஆய்வாளர்களும், ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஒரு இரண்டாம் நிலை காவலரும் பணிபுரிந்து வருகின்றனர்.

3.3 இம்மாநிலத்தில், காவல் ஆய்வாளர்களின் தலைமையில் 96 அமலாக்கப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளை அமல்படுத்துவதற்காக அனைத்து அமலாக்கப் பிரிவுகளும் காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மாவட்டம் / நகரங்களில் உள்ள துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் குறிப்பிட்ட பகுதிகளில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மதுவிலக்கை அமல்படுத்துவதில் நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் முதன்மை பொறுப்பு வகிக்கும் காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களின் நிர்வாக மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டின் கீழ் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள், அதனைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் பணியாற்றுகின்றனர்.

**3.4 அண்டை மாநிலங்களிலிருந்து போலி மதுபானம் / எரிசாராயம் கடத்துவதைத் தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:–**

i. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் நுண்ணறிவு தகவல்கள் மற்றும் அலைபேசி அழைப்பு தகவல்கள் (CDR Analysis) ஆகியவற்றின் மூலம் எரிசாராய கடத்தல், போலி மதுபானக் கடத்தல் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து மதுபான கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபடும் முக்கிய குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ii. திருவிழாக்கள் மற்றும் மதுக்கடை இல்லாத தினங்கள் ஆகியவற்றிற்கேற்ப தேவைப்படும் காலங்களில் தற்காலிக சோதனைச் சாவடிகள் உருவாக்கப்பட்டு, அண்டை மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத போலி இந்தியத் தயாரிப்பு அயல் நாட்டு மதுபானம், எரிசாராயம் மற்றும் சாராய உரைகள் ஆகியவை தமிழ்நாட்டிற்குள் கள்ளத்தனமாக கடத்தப்படுவதை கண்காணித்து தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நாகப்பட்டினம் (5), கன்னியாகுமரி (1), தேனி (1), திருவள்ளூர் (5), வேலூர் (5),

கடலூர் (4), விழுப்புரம் (9), கிருஷ்ணகிரி (7), ஈரோடு (1), சேலம் (2), நீலகிரி (1), திருவாரூர் (1), திருப்பூர் (1) மற்றும் கோயம்புத்தூர் (1) ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சென்னை மாநகரில் (1) என மொத்தம் 45 நிரந்தர மதுவிலக்கு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இது தவிர, நாகப்பட்டினம் (2), கடலூர் (1), விழுப்புரம் (1), கிருஷ்ணகிரி (1), திருவள்ளூர் (1) மற்றும் திருவாரூர் (1) ஆகிய மாவட்டங்களில் 7 நடமாடும் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன.

iii. கள்ளச் சாராயம் காய்ச்சுதல் மற்றும் அண்டை மாநில மதுபானங்களை கடத்துதல் ஆகியவற்றை தடுப்பதற்காக பாதிக்கப்பட்ட இடங்களில் சிறப்பு சோதனைகள் நடத்தப்படுகின்றன.

iv. எரிசாராயம் மற்றும் போலி மதுபானக் கடத்தல் வழிகளை கண்காணிக்கவும், மதுவிலக்கு அமலாக்கம் தொடர்பான குற்றங்களை திறம்பட விசாரணை மேற்கொள்ளவும், அலைபேசி அழைப்பு தகவல்கள் மென்பொருள் (CDR Analysis Software) வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

v. தெளிந்த சாராவியான செறிவு மிகுந்த ஆல்கஹால், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத மலிவு விலை மதுபானமாக விற்பதற்காக கடத்தப்படுகிறது. அநேக சமயங்களில் இத்தகைய சாராய விற்பனையால் சோக நிகழ்வுகளும் நிகழ்கின்றன. மாநிலம் முழுவதும் மத்திய நுண்ணறிவுப் பிரிவு மற்றும் மதுவிலக்கு அமலாக்க பிரிவுகளின் ஆளிநர்களால் சேகரிக்கப்படும் நுண்ணறிவு தகவல்களின் அடிப்படையில், திடீர் வாகனத் தணிக்கைகள் முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றன. 2021–ஆம் ஆண்டில் திடீர் வாகனத் தணிக்கையின் மூலம் 1,81,254 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 37 லாரிகள், 1 பேருந்து, 6 ஜீப்புகள், 188 வேன்கள், 575 கார்கள், 127 ஆட்டோக்கள் மற்றும் 4751 இரு சக்கர வாகனங்கள் உட்பட மொத்தம் 5685 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

**தகவலாளர்களுக்கு வெகுமதிகள்**

3.5 ஒவ்வொரு ஆண்டும் கள்ளச்சாராயம், போலி மதுபானம், பிற மாநிலங்களில் இருந்து மதுபானம் கடத்துதல் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறித்து தன் உயிரை பணயம் வைத்து மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

மற்றும் உள்ளூர் காவல் அதிகாரிகளுக்கு தகவல்கள் தரும் தகவலாளர்களுக்கு பண வெகுமதி வழங்கும் பொருட்டு ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது.

3.6 2020–2021–ஆம் ஆண்டில், எரிசாராயம் கடத்துதல் தொடர்பான தகவல்கள் அளித்த 23 தகவலாளர்களுக்கு வெகுமதி வழங்கும் பொருட்டு, காவல்துறை கூடுதல் இயக்குநர், அமலாக்கம் அவர்களுக்கு ரூ.3.29 இலட்சம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## வெகுமதி

3.7 எரி சாராயம், போலி மதுபானம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானம் ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு பெரும் பங்கு வகிக்கும் மதுவிலக்கு பிரிவு மற்றும் உள்ளூர் காவல் ஆளிநர்களை ஊக்குவிக்க ரூ.15.00 இலட்சம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருந்தது.

3.8 2020–2021–ஆம் ஆண்டில் எரிசாராயம், போலி மதுபானம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானம் ஆகியவற்றை கைப்பற்றுவதற்கு பெரும் பங்கு வகித்த காவலர் முதல் கூடுதல் காவல்

கண்காணிப்பாளர் வரை உள்ள காவல் ஆளிநர்களுக்கு வெகுமதி / ஊக்கத் தொகை வழங்க ரூ.9.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்**

3.9 2021–ஆம் ஆண்டில், 7,76,464 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டுள்ளது. 1,16,516 லிட்டர் எரிசாராயம், பிற மாநிலங்களில் இருந்து கடத்தி வரப்பட்ட 25,74,434 மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டன. மதுவிலக்குக் குற்றங்களில் பயன்படுத்தப்பட்ட 5685 மோட்டார் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

3.10 2021–2022–ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டவாறு, தேனி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிற்கு ஒரு புதிய காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**கள்ளச்சாராய இறப்பு சம்பவங்களை தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்**

3.11 மதுவிலக்கு அமலாக்க துறையின் சிறப்பான நடவடிக்கையினால் கடந்த 13 வருடங்களாக கள்ளச்சாராய இறப்பு ஏதும் மாநிலத்தில் நிகழவில்லை.

சில மாவட்டங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுதல் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெறும் நிலையில், கள்ளச்சாராய தடுப்புச் சோதனைகள் அவ்வப்போது தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. உயிரிழப்புகள் நிகழ்வதற்கு 'மெத்தனால்' முக்கியமான காரணமாகும். மேலும், மெத்தனால் வைத்திருத்தல், பயன்படுத்துதல், எடுத்துச் செல்லுதல், இறக்குமதி, விற்பனை செய்தல் போன்றவற்றை மிகுந்த கட்டுப்பாடுடன் கண்காணிப்பதற்கு ஏதுவாக 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரெஞ்ச் பாலிஷ்) விதிகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

3.12 மெத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகள், அப்பொருளை வைத்திருக்க மற்றும் பயன்படுத்த உரிமம் பெற்ற நிறுவனங்கள் முதலியவற்றை சோதனையிட மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் அனுப்பப்படும் மாதாந்திர அறிக்கை அமலாக்க தலைமையிடத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

**கள்ளச்சாராயம் மற்றும் மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு**

3.13 மது அருந்துதல் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதலுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம்கள் நடத்த 2021-2022-ஆம்

ஆண்டில் ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.14 கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் இடையே இளம் வயதில் மது அருந்துவதினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த குழு விவாதங்கள், சுவரொட்டிகள் மற்றும் கட்டுரை எழுதுதல் போன்ற போட்டிகள் இணைய வழி மூலமாக நடத்தப்படுகின்றன. இதைத் தவிர, மது அருந்துவதால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வு வாசகங்கள் இடம் பெற்ற டி–ஷர்ட்கள், பைகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் நாட்காட்டிகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. விழிப்புணர்வு முகாமின் ஒரு பகுதியாக, போக்குவரத்து நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு வாசகங்கள் இடம்பெற்ற ஒட்டும் வில்லைகள் வழங்கப்பட்டு பேருந்துகளில் ஒட்டப்படுகின்றன. மேலும் கதை மற்றும் கவிதை எழுதுதல் , குறும்படங்கள் தயாரித்தல் போன்ற போட்டிகள் மாநில அளவில் நடத்தப்படுகின்றன.

**மதுவிலக்கு உதவி மையம் – 10581**

3.15 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், எரிசாராயம் கடத்துதல், போலி மதுபானம் மற்றும் கள்ளச்சாராய விற்பனை ஆகிய மதுவிலக்கு குற்றங்கள்

தொடர்பாக தகவல் அளிப்பதற்கு ஏதுவாக கட்டணமில்லா மதுவிலக்கு உதவி எண். 10581 ஏற்படுத்தப்பட்டு, 24 மணி நேரமும் காவல்துறை கூடுதல் இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகக் கட்டுப் பாட்டு அறையில் இயங்கி வருகிறது.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்**

3.16 கள்ளச்சாராய ஒழிப்புப் பணியில் திறம்பட செயல்படும் காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்கு "காந்தியடிகள் காவலர் பதக்கம்" ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2021–ஆம் ஆண்டு முதல் மதுவிலக்கு அமலாக்கத்தில் திறம்பட செயல்படும், காவல் துறை கண்காணிப்பாளர் பதவி மற்றும் அதற்கு குறைவான பதவித் தரத்திலுள்ள இந்திய காவல் பணி அதிகாரிகளுக்கும் காந்தியடிகள் காவலர் பதக்கம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 4. போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு (குற்றப் புலனாய்வு பிரிவு)

### பிரிவு உருவாக்கம்

4.1 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது (குற்றப் புலனாய்வுத் துறை) சென்னையில் 17.12.1963 அன்று ஏற்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திண்டுக்கல், தேனி, விழுப்புரம், இராமநாதபுரம், கோயம்புத்தூர், தூத்துக்குடி, வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு அலகுகள் தொடங்கப்பட்டன. தற்போது மொத்தம் 15 போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு அலகுகள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் ஆகிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைப் பற்றிய நுண்ணறிவு தகவல்களை சேகரித்தல் மற்றும் இந்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவை இப்பிரிவின் முக்கிய பணிகள் ஆகும்.

**நிர்வாக அமைப்பு**

4.2 காவல்துறை கூடுதல் இயக்குநர் (குற்றம்) அவர்களின் நிர்வாகத் தலைமையிலும், காவல்துறை தலைவர் (போதைப் பொருள் தடுப்புப் படை) அவர்களின் மேற்பார்வையிலும் இயங்கி வரும் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவானது, 1 காவல் கண்காணிப்பாளர், 1 காவல் கூடுதல் கண்காணிப்பாளர், 12 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 16 காவல் ஆய்வாளர்கள், 17 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 126 இதர நிலைக் காவலர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

## 4.3 2022–2023–ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை விவரங்கள்

- தமிழ்நாடு போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு மற்ற மாநிலங்களில் உள்ள சட்ட அமலாக்கப் பிரிவுகளுடன் இணைந்து கஞ்சா கடத்துவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- 1985–ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தை சிறந்த முறையில் அமலாக்கம் செய்யும் பொருட்டு,

போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினருக்கு பயிற்சி அளித்தல்.

- மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அருகில் உள்ள மருந்து கடைகளை சோதனையிடுதல்.

- நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்து, மற்ற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு போதைப் பொருள் கடத்தி வருவதை தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

**2021–ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட / கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள்**

4.4 2021–ஆம் ஆண்டில், 20,452.4 கிலோ எடையுள்ள கஞ்சா கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக, 6853 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 19 வெளிநாட்டினர் உட்பட மொத்தம் 9571 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**4.5 2021 – 2022–ஆம் ஆண்டின் சாதனைகள்**

- மாநிலங்களுக்கிடையே கூட்டாக சேர்ந்து போதைப் பொருட்கள் கடத்தலில் ஈடுபடும் ஆந்திர

பிரதேசம், கர்நாடகம், ஒடிசா மற்றும் தெலுங்கானா மாநிலங்களை சேர்ந்த குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- மாநிலம் முழுவதும் உள்ள மருந்தகங்களில் சட்டத்திற்கு புறம்பாக மருந்துகளின் விற்பனையை தடுக்க மருந்து ஆய்வாளர்களுடன் இணைந்து திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களின் வரம்பிற்குட்பட்ட நிதியின் (Head of Police Force's discretionary fund) கீழ், போதைப் பொருட்கள் நுண்ணறிவுப் பிரிவிற்கு இணையதள குற்றப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

- அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் மூலம் போதைப் பொருட்கள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் சமூக ஊடகங்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டன.

- தமிழ்நாடு போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவிற்கென இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

- மாநிலம் முழுவதும் 10 மோப்ப நாய்கள் போதைப் பொருட்களை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

**போதைப் பொருள் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைத்தல்**

4.6 போதைப் பொருள் குற்றவாளிகள், 1982–ஆம் ஆண்டின் தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், கணினி வெளிச் சட்டக் குற்றவாளிகள், மருந்து சரக்குக் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொலித் திருடர்கள் போன்றவர்களின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ், (தமிழ்நாடு சட்டம் 14/1982) சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

**சட்ட விரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் – 1988 (PITNDPS ACT – 1988)**

4.7 1988–ஆம் ஆண்டின் சட்ட விரோத போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் கடத்தல் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988) ஒன்றிய அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டம் 01.07.1988 அன்று முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களை கள்ளத்தனமாக கடத்தும் நபர்களை காவலில் வைக்க, ஒன்றிய அரசு மற்றும்

மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் ஒரு ஆண்டும் அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளும் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளை தடுப்பு காவலில் வைக்கலாம்.

**5. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்**

5.1 1956–ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் (Companies Act, 1956) கீழ் 23.05.1983 அன்று தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) நிறுவப்பட்டது.

5.2 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17–C (1–A)(a)–இன்படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகள் மற்றும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு முழுவதும் மொத்த விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை, இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 23.05.1983 முதல் மதுபான மொத்த விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. மேலும், 1937–ஆம் ஆண்டின் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937), பிரிவு 17–C (1–B)(a)–இன்படி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான வகைகளை சில்லறை விற்பனை செய்யும் தனித்த சிறப்புரிமை இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, 29.11.2003

முதல் மதுபான சில்லறை விற்பனையை இந்நிறுவனம் செய்து வருகிறது. இவை மட்டும் இல்லாமல், இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளையும் இந்நிறுவனம் சந்தைப்படுத்தி வருகிறது.

**இயக்குநர் குழுமம்**

5.3 இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை இயக்குநர் குழுமம் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் செய்கிறது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஆவார். அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, அரசு செயலாளர், வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை, ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியோர் இந்நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

**பங்கு மூலதனம்**

5.4 இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனமான ரூ.15.00 கோடி முழுவதும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**நிறுவனத்தின் அமைப்பு**

5.5 மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, பொது மேலாளர் (நிதி), மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்), பொது மேலாளர் (சில்லறை விற்பனை), தொழிலாளர் இணை ஆணையர் நிலையில் பொது மேலாளர் (பணியாளர் நலன்), துணை பொது மேலாளர் (கொள்முதல் மற்றும் விற்பனை), நிறுவனச் செயலர், முதன்மை கணக்கு அலுவலர், சட்ட அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்.

**பதிவு அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கள்**

5.6 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதிவு அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் மண்டல அலுவலகங்கள் உள்ளன. இந்த அலுவலகங்களை மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர்கள் நிர்வகிக்கின்றனர்.

**சிறப்பு பறக்கும் படைகள்**

5.7 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் அவற்றுடன் இணைந்த மதுக்கூடங்கள் முறையாக செயல்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்யும் பொருட்டு, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மண்டல அலுவலகங்களில் சிறப்பு பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த பறக்கும் படைகளுக்கு துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் தலைமை வகிக்கின்றனர்.

**மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், மதுபானக் கிடங்குகள், மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்**

5.8 இந்நிறுவனத்திற்கு, 31.03.2022 அன்றுள்ளவாறு, 38 மாவட்ட மேலாளர் அலுவலகங்களும், 43 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானக் கிடங்குகளும், 5,380 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் மற்றும் இக்கடைகளுடன் இணைந்த 3,240 மதுக்கூடங்களும் உள்ளன.

5.9 இந்நிறுவனம் 43 மதுபானக் கிடங்குகளில் மதுபானங்களை இருப்பு வைக்கிறது. இந்த 43 மதுபானக் கிடங்குகளில் 31 மதுபானக் கிடங்குகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

## மதுபான சில்லறை விற்பனைக் கடை பணியாளர்கள்

5.10 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் 31.03.2022 அன்றுள்ளவாறு, 6,715 கடை மேற்பார்வையாளர்களும், 15,000 விற்பனையாளர்களும் மற்றும் 3,090 உதவி விற்பனையாளர்களும் ஒப்பந்த/தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

## மதுபான சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர் நலத்திட்டங்கள்

5.11 மதுபான சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர்களுக்கு மாதத் தொகுப்பூதியம் மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் ஊக்க ஊதியம் (Bonus) மற்றும் கருணைத் தொகையானது அரசின் உத்தரவிற்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பணியாளர்களின் நலனுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், தொழிலாளர் வருங்கால வைப்புநிதித்

திட்டம், தொழிலாளர் வைப்புநிதியுடன் இணைந்த காப்புறுதித் திட்டம், பணிக்கொடை, குடும்ப சேமநல நிதித் திட்டம், ஆண்டு கூடுதல் ஊக்கத்தொகை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மதுபான வகைகள் கொள்முதல்**

5.12 இந்நிறுவனம், மாநிலத்தில் இயங்கி வருகின்ற 11 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள், 7 பீர் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் 1 ஒயின் உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளைக் கொள்முதல் செய்கிறது.

**இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுபான வகைகளை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கடைகள் மூலம் விற்பனை செய்தல்**

5.13 இந்நிறுவனம், 541 வகையான வெளிநாட்டு மதுபானம், பீர் மற்றும் ஒயின் வகைகளை எப்.எல்.11 உரிமம் பெற்ற 239 சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்கிறது.

**கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுதல்**

5.14 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் திருட்டு நடப்பதைத் தடுப்பதற்காகவும் அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்தவும், அதிகமாக பாதிக்கப்படக்கூடிய 3000 கடைகளில் இரவுப் பார்வை கொண்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கண்காணிப்பு கேமராக்கள் திருட்டுக்களை குறைப்பதற்கு மட்டுமல்லாமல் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபடக்கூடிய தனிநபர்களை கண்டுபிடிக்கவும், மதுபானக் கடைகளின் அருகில் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் ஏதேனும் நடந்தால் அவற்றை அடையாளம் காணவும் வழிவகை செய்கிறது. இந்த கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகும் நிகழ்வுகள் சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளன.

**இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணைய உரிமம்**

5.15 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் அனைத்து மதுபானக் கிடங்குகளும் மற்றும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளும் 2006–ஆம் ஆண்டின் இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் சட்டம் மற்றும் அதன் கீழ்

இயற்றப்பட்ட விதிகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்திய உணவு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் வழங்கியுள்ள உரிமம் உரிய காலத்திற்குள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

## பணப் பாதுகாப்பு பெட்டகம் நிறுவுதல்

5.16 திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகமாக நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள, நகர மற்றும் கிராம பஞ்சாயத்துப் பகுதிகளில் செயல்படும் 2,825 மதுபானக் கடைகளில் பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் ஒவ்வொன்றும் 300 கிலோவிற்கு மேல் எடை கொண்டவை மற்றும் பிற கருவிகளால் பழுது ஏற்படுத்த இயலாதவை ஆகும். பணப் பாதுகாப்பு பெட்டகங்கள் மதுபானக் கடைகளின் தரையில் பதிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பின்புறமும், மேல் பகுதியிலும், வலது மற்றும் இடது என இரண்டு பக்கங்களிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளன. கடைப் பணியாளர்கள் விற்பனை செய்த தொகையினை விற்பனை நேரம் முடிந்த பிறகு பாதுகாப்பாக வைத்துக்கொள்ள இந்த பணப் பாதுகாப்பு பெட்டகம் உதவுகிறது.

**மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவுதல்**

5.17 நுகர்வோர்கள் மின்னணு தொழில்நுட்பம் வாயிலாகவும் விற்பனைத் தொகையை செலுத்துவதற்கு ஏதுவாக, அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளிலும் மின்னணு விற்பனைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

**கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள்**

5.18 கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ்நாடு அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்ட நிலையான இயக்க நடைமுறைகள்/ அரசாணைகள் ஆகியவை அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், மதுபானக் கிடங்குகள், மாவட்ட மேலாளர் அலுவலகங்கள், முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றில் சீரிய முறையில் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**மதுவிற்பனை இல்லாத நாட்கள்**

5.19 தமிழ்நாட்டில் காந்தி ஜெயந்தி தினம், திருவள்ளுவர் தினம், மகாவீர் ஜெயந்தி தினம், நபிகள் நாயகம் பிறந்த நாள், வடலூர் இராமலிங்கர்

நினைவு நாள், சுதந்திர தினம், குடியரசு தினம் மற்றும் மே தினம் ஆகிய எட்டு நாட்கள் மது விற்பனை இல்லாத நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, முக்கிய நிகழ்வுகளின் நாட்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளாட்சித் தேர்தல் தொடர்புடைய நாட்கள் ஆகியவையும் மது விற்பனையில்லாத நாட்களாக அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன.

**அரசு வருவாய்**

5.20 அரசின் வருவாய் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:–

| வரிசை எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | மதிப்புக் கூட்டு வரி (விற்பனை வரி) | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1 | 2003-04 | 1657.10 | 1982.83 | 3639.93 |
| 2 | 2004-05 | 2549.00 | 2323.03 | 4872.03 |
| 3 | 2005-06 | 3176.65 | 2854.12 | 6030.77 |
| 4 | 2006-07 | 3986.41 | 3487.20 | 7473.61 |
| 5 | 2007-08 | 4764.05 | 4057.11 | 8821.16 |
| 6 | 2008-09 | 5755.42 | 4846.08 | 10601.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 2009-10 | 6740.59 | 5757.63 | 12498.22 |
| 8 | 2010-11 | 8115.90 | 6849.52 | 14965.42 |
| 9 | 2011-12 | 9956.06 | 8125.10 | 18081.16 |
| 10 | 2012-13 | 12125.31 | 9555.36 | 21680.67 |
| 11 | 2013-14 | 5034.82 | 16640.07 | 21674.89 |
| 12 | 2014-15 | 5731.18 | 18433.77 | 24164.95 |
| 13 | 2015-16 | 5836.01 | 20009.57 | 25845.58 |
| 14 | 2016-17 | 6248.17 | 20747.08 | 26995.25 |
| 15 | 2017-18 | 6009.25 | 20788.71 | 26797.96 |
| 16 | 2018-19 | 6863.11 | 24294.72 | 31157.83 |
| 17 | 2019-20 | 7205.97 | 25927.27 | 33133.24 |
| 18 | 2020-21 | 7821.69 | 25989.46 | 33811.15 |
| 19 | 2021-22 (*) | 8201.83 | 27811.31 | 36013.14 |

**(*)ஒத்திசைவுக்கு உட்பட்டது.**

**V செந்தில்பாலாஜி**
**மின்சாரம், மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.